Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4 00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 மாசி (05 - 02 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 352

## ச.தே.செ.ச. முன்னிலையில் மனித உரிமைகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

உணவு, அத்தியாவசியத் தேவையான மருந்து வகைகள் ஆகியவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்வது மனிதனின் அடிப்படை உரிமையாகும். ஆனால் இந்த உரிமைகள் வடக்கு கிழக்கு மக்களுக்கு மறுக்கப்படுகின்றன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் கண்களின் முன்னாலேயே தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா சுதந்திர தினத்தன்று

# உருத்திரபுரத்தில் பத்துப் பேர் விமானக் குண்டு வீச்சிற்கு பலி

## ஐந்துபேர் படுகாயம்; கடைகள், வாகனம் சேதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் கூழாவடிச்சந்தியில் சிறிலங்கா விமானப்படை வீசிய குண்டொன்றில் சிக்கிய பத்துப்பேர் கொல்லப்பட்டனர். ஐந்துபேர் காயமடைந்தனர். சிறிலங்காவின் சுதந்திர தினமான நேற்று நடந்த இந்தக் குண்டுவீச்சில் பல கடைகளும் மினிபஸ்களும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் உருத்திரபுரம் பகுதியை வட்டமிட்ட இரண்டு சிறிலங்கா விமானப்படை விமானங்கள் திடீரென கூழாவடிச்சந்தியில் குண்டொன்றை வீசியது.

குண்டுவீச்சு ஆரம்பத்தில் சந்தியில் நின்ற மக்களும், கடைகளில் பொருள்கள் வாங்கிக் கொண்டுநின்ற மக்களும் பாதுகாப்பைத்தேடி ஓடினர். இதில் பலர் மதகு ஒன்றின் கீழ் புகுந்து கொண்டனர்.

அதேவேளை விமானம் வீசிய குண்டொன்று மதகின் [illegible] பகுதியில்வீழ்ந்ததினால் மதகினுள் இருந்த பத்துப்பேர் பலியாயினர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர். இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அதேவேளை விமானங்கள் வீசிய ஏனைய குண்டுகள் கடைகளுக்கிடையிலும், வயல் பகுதியிலும் வீழ்ந்தன. இதனால் ஐந்து கடைகளும், சந்தியில் தரித்துநின்ற மூன்று வாகனங்களும் சேதமடைந்தன.

மதகின் அருகில் வீழ்ந்து வெடித்த குண்டினால் தருமர் (வயது 35), குகன் (வயது 22), ஜெகன் (வயது 14), சந்திரன் (வயது 14), காந்தன் (வயது (4 ஆம் பக்கம் பார்க்க)

## இரசாயனத்தொழிற்சாலைமீதும் விமானக் குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் பரவலாக விமானத் தாக்குதல் இடம்பெற்றன. இந்தத் தாக்குதலின்போது பரந்தன் இரசாயனத்தொழிற்சாலையின் ஒரு பகுதி சேதமடைந்தது.

சம்பவதினம் காலையிலிருந்து மாலைவரை ஹெலிகொப்டர் ஒன்றும், குண்டுவீச்சு விமானங்கள் இரண்டும் கிளிநொச்சி, பரந்தன் ஆனை (4 ஆம் பக்கம் பார்க்க)

## முன்மாதிரி

(செ. த. மை)

நவற்குழியில் வசிக்கும் திருமதி சரஸ் தியாகேசன் தனது 15 வயது நிறைந்த (கோபிநாதன்) மகனை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடுவதற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி [illegible] நவற்குழி வட்டப்பொறுப்பாளர் தி. [illegible] அவர்களிடம் கையளித்துள்ளார்.

## 2000 மக்கள் மடிவு

மூன்று தினங்களுக்கு முன் பாகிஸ்தான், ஆப்கானில் (4 ஆம் பக்கம் பார்க்க)

### மார்ச் மாத இறுதி வாரத்தில்

## யாழ். முத்தமிழ் விழா நடத்த கலை கலாசார பிரிவு ஏற்பாடு

விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினரால் மார்ச் இறுதி வாரத்தில் முத்தமிழ் விழா யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடாத்தப்பட உள்ளது என விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதில் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவாக இந்தவிழா ஒன்பது நாட்கள் நடைபெறவுள்ளன. இவ்விழாவில் பங்குபெற விரும்பும் இசை நடன, நாடகக் கலைஞர்கள் கோண்டாவிலில் அமைந்துள்ள கலை, கலா (4 ஆம் பக்கம் பார்க்க)

## 40 ஆம் கிராமத்தில் 4 தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 40 ஆம் கிராமத்தைச் சேர்ந்த நான்கு அப்பாவித்தமிழர்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்படி கிராமவாசிகள் விறகு எடுக்கச் சென்றசமயம் 39 ஆம் கிராமத்தில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் இவர்களை நோக்கி (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாடப்புத்தகங்களின் ஒரு தொகுதி யாழ். நகர் வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்குரிய ஒரு தொகுதி இலவச பாடப்புத்தகங்கள் நேற்றையதினம் இங்கு லொறிகளில் கொண்டு வரப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு பத்து லொறிகளில் பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்து ஏற்றி வரப்பட்ட இந்தப் புத்தகங்களையும் இந்து மகளிர் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. (4 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளைகள் தாபரிப்பு நிதி 10 ஆம் திகதி வழங்கப்படும்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினால், வன்செயல்களின் போது தந்தையை இழந்த பிள்ளைகளுக்கான தாபரிப்பு நிதி வழங்கும் வைபவம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு சமாசத் தலைவர் திரு கோ. தியாகராசா (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### பிரகாஷ்

### சுஜன்

ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினருடன் [illegible] ஏற்பட்ட மோதலில் பிரகாஷ் (குணசேகரம் செந்தில்) [illegible] வீரமரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாவிட்டபுரம் சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருடனான மோதலில் சுஜன் (செபமாலை ஜெயசன் வசாவிளான்) என்ற போராளி வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## நீலாவணையில் இரு தமிழர்கள் இராணுவத்தால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய நீலாவணை என்ற இடத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு அப்பாவித் தமிழர்களை சுட்டுக் கொன்றுள்ளனர். கடந்த மாதம் 26 ஆம் திகதி 40 ஆம் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு தமிழர்கள் மேற்படி இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

## வவுனியா நகரப்பகுதிக்கு செல்ல புலிகளினால் புதிய விதிமுறைகள்

(வவுனியா)

பொதுமக்கள் வவுனியா நகரப்பகுதிக்குச் சிரமமின்றிச் சென்று வருவதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வவுனியா நிர்வாகப் பிரிவினரால் புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று முதல் வவுனியா மாவட்டத்தில் வசிப்போர் குடும்பத்தில் ஒருவர் வீதமே வவுனியா நகரப் பகுதிக்குச் சென்று வருவதற்கு தினமும் அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மருக்காரம்பளை (4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் - பிரேமதாசா

"இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த உயர் முன்னுரிமையையும் எமது அரசாங்கம் அளிக்கும்" என்று சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர் தொகை 296 பேர்; தடுப்பூசி 43 பேருக்கு மட்டுமே!

(கொழும்புத்துறை)

விசர்நாய்க்கடியினால் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த ஏழு பிள்ளைகளின் தாயான கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை செல்லம்மா (63 வயது) கடந்த வியாழக்கிழமை இரவு ஏழு (4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாயப்படுத்தி சுதந்திரதினம் கொண்டாட வைத்தனர்

கொழும்பு செல்வகந்தைச் [illegible] சுதந்திரதின விழாவைக் கட்டாயத்தின் பேரில் கொண்டாடியுள்ளனர். (4 ஆம் பக்கம் பார்க்க)

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(OL வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 O/L Dec. ஆண்டு 10, 9, 8, 7, 6

மாசி 6 இல் ஆரம்பம் மாலை 3.00 மணி

மு. குறிப்பு: புதிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(B/ 1974)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



| | |
|---|---|
| மலர்வு | உதிர்வு |
| 20 - 03 - 1949 | 26 - 12 - 1990 |

### திரு. சோமசுந்தரம் சிவபாலசிங்கம்
(சிவம்)

பண்பின் திருவுருவே; பாசத்தின் பொக்கிஷமே;  
அன்பின் அலைகடலே; அழியாத ஓவியமே:  
எம் இதயத்தில் இடங்கொண்ட சீலனே; சிவமே!  
எம் உடல்விட்டு எம் ஆவி பிரிந்திட்டாலும்;  
உன் நினைவலைகள் எமை விட்டகலாதையா!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 07-02-1991 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் சட்டிவெளவால் கடற்கரையிலும், வீட்டுக் கிருத்தியங்கள் 08-02-1991 வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால், அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"செல்வமனை"  
நாரந்தனை வடக்கு,  
ஊர்காவற்றுறை.

அன்னாரின் பிரிவால் துயருறும்,  
மனைவி, பிள்ளைகள்  
பெற்றோர், சகோதரர்கள்.

(R, 1079)

## வரிவிளம்பரம்

### விற்பனை

மிக்க்லைற் திரவ சவர்க்கார Liquid Soap ஐ வைத்து அழுக்கு அகற்றி வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. முழுப் போத்தல் ரூபா 90/- அரைப் போத்தல் ரூ 45/- 10க்கு மேல் விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ் நவீன சந்தை, கண்ணன் கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. மிக்க்லைற் (B-1969)

### வரலாறு

விற்பனையாகின்றது! வரலாறு- ஆண்டு: 11, வரலாறு- ஆண்டு: 6 (புதியபாடத்திட்டம்) ஆக்கியோன்: த. தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (R-1083)

### கிளின்கட் போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோனியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாக செய்து பெற்றுக்கொள்ள கிளின்கட் 239 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (-1958)

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்துடன் கைப்பை ஒன்று நேற்று மாலை யாழ். வைத்தியசாலை வீதியில் யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்களால் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தகுந்த ஆதாரங்களைக் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம் என நலன்புரிச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

## விமானவிபத்தில் 40 பேர் பலி

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில லொஸ் ஏஞ்சல்ஸில ஏற்பட்ட விமான விபத்தில் 40 பேர் உயிர் இழந்துள்ளனர்.

737 ரக போயிங் விமானம் தரையிறங்கிய போது சிறுவிமானம் ஒன்றுடன் மோதியதாகவும் அதில் இருந்த 79பேரில் 40பேர் உயிர் இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



வீரமலர்வு 1969-04-18

வீரமரணம் 1990-11-04

### மேஜா சஞ்சிகா
(சுந்தர்ராஜன் கலைச்செல்வி)

கலைகளிலே காவியத்தைக் கண்ட செல்வி  
நிலைகுலையா கொள்கைதனை ஏற்ற செல்வி  
தலையதனைத் தமிழ் மண்ணுக்கு ஈய்ந்த செல்வி  
தலை நிமிர தாய்க்குலத்தை வைத்த செல்வி  
வாழ்கின்ற நாட்கள் பல உண்டுதானே  
வளர்கின்ற பயிர்போல நீயிருக்க  
வாழ்வதற்கு மண்ணொன்று வேண்டுமென்று  
வரியுடையில் துப்பாக்கி ஏந்தினையே  
மானமென்று பெரிதெனவே  
மறைத்தமிழன் சரித்திரம்  
காதைதனைப்படைத்தவளே சஞ்சிகா  
தமிழ்மறவர் மண்ணதனைக் காத்திட  
போனனை பலாலி என்றுமே  
பொன்னுறக்கம் தானதுவும் இன்றியே  
சேனைபடை தானளித்தீர் சஞ்சிகா  
சிந்திய உன் உதிரத்திற்கு அஞ்சலியே

சரவெட்டி இழக்கு  
கரவெட்டி

அப்புச்சி, அம்மா, அப்பா,  
அண்ணா, அக்கா, மற்றும்  
உறவினர், நண்பர்கள்.

(B-1971)

## நினைவு கூருகின்றோம்!

### பெப்ரவரி 5

1987 இல் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

★ துரையப்பா குமாரசாமி  
(ஆயித்தியமலை)

★ நாகமணி கந்தசாமி  
(மகிழடிவெட்டுவான்)

1988இல் வீரமரணமடைந்த

சுரேஸ் / துரை  
(மு. விஸ்வராசா - நற்பிட்டிமுனை

1981இல் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட

பேபி (தேவராணி முருகதாஸ் - மயிலணி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மழலைகள் இங்கு  
விடுதலை பேசும்  
கல்லறைகள்  
இங்கு கவிபாடும்  
அடுப்பங்கரையில்  
ஊது குழல் பிடித்த  
மலர்க்கரங்கள்  
இங்கே  
அருள் -8ம் ஏவும்  
கல்லறைகள் - இங்கே  
ஆலயமாய் மாற  
ஆலயங்கள் -  
பயிற்சி கூடமாய் மாறும்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து பணியாற்றியவர்களாவர்.

– விடுதலைப் புலிகள்  
மக்கள் முன்னணி

(B-1946)

## 46 ஆம் நாள் நினைவஞ்சலி

22-12-90 அன்று கட்டுவனில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட எமது ஊர் வேங்கைகளான



நீங்கள்,  
விடியலின் வெள்ளிகள்  
வீரத்தின் விளைநிலங்கள்  
சுதந்திரத்தின் சுடர்ஒளிகள்  
தாயகத்தின் தவச்செல்வங்கள்



கப்டன் அஷா  
(பத்மாவதி நடராஜா)

வீரவேங்கை ஸ்ரான்லின்  
(பகீதன் துரைரட்ணம்)

ஆகியோருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

(R-1078)

– அரியாலை முதலுதவி நிலையம்

★ சிந்தனைக்கு ★

தன் சொந்த அனுபவத்தால் கற்பதைத் தவிர, மனிதன் வேறு அறிவு பெறுவதில்லை.

— வைலேண்ட்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம். 05-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
4 பெ எண் 05

# அனுபவம் தானே பெறல் வேண்டும்

மூன்றாம் உலகின் பொருளாதார நெருக்கடிக்கு குடித்தொகையின் அபரிமிதமான வளர்ச்சியே காரணம் என மேற்கத்தைய பொருளியலாளர்கள் தெரிவித்தபோது, சில பொருளியலாளர்கள் மனிதன் தனியாக வாயுடனும் வயிற்றுடனும் பிறக்கவில்லை, இரண்டு கையுடனும் காலுடனும் பிறக்கின்றான் எனத் தெரிவித்தனர். ஆனால் இன்று இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு இலங்கையரும் வாயுடனும், வயிற்றுடனும் மட்டுமல்ல, 425 அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு கடனுடனும் பிறக்கின்றார்கள்.

அதாவது இலங்கையில் இன்று பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் 425 டொலர் வெளிநாட்டுக் கடனுடன் பிறக்கின்றது. அதேவேளை இங்கு வாழும் ஒவ்வொரு பிரஜையும் 60 அமெ. டொலர் கடனுடன் வாழ்கின்றது. தற்போதைய நிலையில் 3868.5 மில். அமெ டொலரை வெளிநாட்டுக்கடனாக இலங்கை செலுத்தவேண்டியுள்ளது. 1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது 124 மில் அமெரிக்க டொலராக இருந்த வெளிநாட்டுக் கடனின் அளவு 1991 ஆம் ஆண்டு முடிவில் 11 000 மில். அமெ டொலராக இருக்கும் எனவு தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையிலும், 1991 ஆம் ஆண்டு பாதுகாப்புச் செலவினத்திற்கென ஏறத்தாழ 300 மில் அமெ. டொலர்களை சிறிலங்கா அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகை வருட இறுதியில் வரும் குறை நிரப்புப் பிரேரணைகளுடன் 500மில். அமெ. டொலர்களை எட்டிப் பிடித்துவிடும்.

அத்தோடு இன்று வளைகுடாவில் தோன்றியுள்ள யுத்தத்தின் காரணமாக சிறிலங்காவின் தேயிலையின் ஏற்றுமதியில் 60 வீதத்திற்கு மேல் முடங்கிவிட்டது. கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் கேட்பாரற்று தேயிலை கிடக்கின்றது. தேயிலை களஞ்சியப்படுத்த இடமின்றி சிறிலங்கா அவஸ்தைப்படுகின்றது.

மேலும் மத்திய கிழக்கில் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்த இலட்சக்கணக்கான இலங்கையர் யுத்தத்தினால் நாடு திரும்பியுள்ளனர். இதன் காரணமாகவும் பெருமளவு அந்நியச் செலாவணி வரவு முடங்கிவிட்டது. இந்த வளைகுடாப் போரால் மாதாந்த 13.75 மில். அமெ. டொலர்-வருடம் 165 மி. அமெ டொலர்- சிறிலங்காவிற்கு நட்டம் ஏற்படுகின்றது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிகள் பற்றியோ, இதனால் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய பொருளாதார நெருக்கடிகள் பற்றியோ எண்ணுவதாக இல்லை. அதற்கு மாறாக இனப்படுகொலையையே நோக்கமாகக் கொண்ட யுத்தத்தைத் தொடர்வதென்றும், அபிவிருத்திக்கும், அகதிகளுக்கும் என வரும் பணத்தினை யுத்தத்திற்குப் பயன்படுத்தலாமே எனவும் எண்ணமிடுகின்றது.

அதேவேளை, வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிரான யுத்தத்துக்கு தலைமை தாங்கி வரும் அமெரிக்கா, யுத்தச் செலவீடு 40 ஆயிரம் மில் அமெ டொலரில் இருந்து 50 ஆயிரம் மில் அமெ டொலர்கள்வரையு செலவாகும் என மதிப்பிடுகின்றது. தினம் நாளாந்தம் 500 மில் அமெ. டொலரில் இருந்து 1000 மில். அமெ. டொலர்கள் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த யுத்தச் செலவை அமெரிக்கா தான் முழுமையாக ஏற்கவில்லை. 15000 மில் அமெ. டொலர்களை மட்டுமே அமெரிக்கா ஏற்கும் எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. மீதி 35000 மில் அமெ டொலர்களை உலகில் தமக்குச் சார்பான செல்வந்த நாடுகளில் இருந்து பெற அமெரிக்கா விழைகின்றது. இதில் தயக்கங்காட்டுபவர்களை அமெரிக்கா குற்றம் கூறுகின்றது.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானம் அனுபவத்தில் பெற்ற பாடம்.

''கடன்வாங்கிய பணத்தில் போர் ஒன்றை நடத்தக்கூடாது என்பது வியட்னாமில் அமெரிக்கர்கள் கற்றுக்கொண்ட பொருளாதாரப் பாடம்'' இதனை இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ஒப்புக்கொண்டுள்ளார். இதனாலேயே போருக்கான செலவீடுகளுக்கு அந்நிய செல்வந்த நாடுகளை அமெரிக்கா அணுகியுள்ளது. அதேவேளை போர் விரைவில் முடிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றது இத்தனைக்கும் அமெரிக்கா உலகின் முன்னணி வல்லரசாகும்.

இதற்கும் மேலாக அமெரிக்கா இந்தப் போரில் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் போரை நடாத்துகின்றது ஆயினும் இப்போரில் அமெரிக்கா தரப்பிற்கு இழப்புக்கள் ஏற்படினும் வெற்றியில் இன்று எவருக்கும் சந்தேகம் ஏற்படவில்லைதான். ஆனால் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் சிறிலங்காவிற்கு வெற்றி வாய்ப்பு கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை.

இந்த நிலையிலும், சிறிலங்கா ஆட்சியாளரை போரைத் தொடர்ந்து நடத்துமாறு சிங்கள பௌத்த பேரினவாதம் தூண்டிக் கொண்டிருக்கின்றது. மற்றையவரின் அனுபவத்தில் இருந்து பாடம் படிக்க முடியாதவர்கள் தாங்களும் அனுபவப்பட்டேதான் ஆக வேண்டும். இது தவிர்க்க முடியாதது.

கடந்த மூன்று ஆண்டுகளில்

# சாவக. வர்த்தக நிலையங்களுக்கு ஏழரைக் கோடி ரூபா சேத நஷ்டம்

(செ.த.மை)

சாவகச்சேரி நகரிலுள்ள தனியார் வர்த்தக நிலையங்களுக்கு, கடந்த மூன்று ஆண்டுகளில் (87 ஆம் ஆண்டு தொடக்கம் 90 ஆம் ஆண்டு வரை) இந்திய, சிறிலங்கா அரசுகளின் போர் விமானங்களின் தாக்குதல்களினாலும், சூறையாடல்களினாலும் ஏற்பட்டுள்ள சேத நஷ்டங்கள் 7 கோடியே 40 இலட்சத்து 7 ஆயிரத்து 320 ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரின் நவீன சந்தைப் பகுதியை உள்ளடக்கிய வர்த்தக நிலையங்களான உணவுப் பொருள்கள், பல சரக்குவகைகள், உடுபுடவைகள், மருந்துப் பொருட்கள், உரவகைகள், கிருமிநாசினி வகைகள், கால்நடைத்தீனி வகைகள், தளபாடங்கள், வீடியோ நாடாக்கள், தையல் இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள்- உபகரணங்கள் உதிரி பாகங்கள், அழகு சாதனங்கள், அச்சுக்கூட உபகரணங்கள், புகைப்படக் கருவிகள் ஆகியன விற்பனை செய்யும் நிலையங்களும் மற்றும் எரிபொருள் நிரப்புநிலையம், வட்டிக்கடை, ஹோட்டல்கள், தேநீர்க்கடைகள் ஆகியவையும் கொண்ட 67 தனியார் நிலையங்கள் பெருமளவு சேதமடைந்துள்ளன.

குறிப்பாக இந்திய இராணுவ நடவடிக்கையின் போது சூறையாடலும் பெருமளவு நஷ்டம் இந்த வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அகதிகள் வீடுதிரும்ப முடியாது ஏழு மாதங்களாகத் தவிப்பு

(அக்கரைப்பற்று)

இராணுவ நடவடிக்கைகளால் வீடுகளை விட்டு வெளியேறிய 787 குடும்பங்கள் கடந்த ஏழு மாதங்களாக தமது வீடுகளுக்கு திரும்ப முடியாது தவித்து வருகின்றன.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மூன்று அகதி முகாம்களில் பெரும்பாடு மக்கள் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் கண்ணகிபுரம், கவடாப்பிட்டி 5 ஆம் கட்டை, திராய்க்கேணி, மணிக்கமடு ஆகிய இடங்களைச் சேர்ந்தவராவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### 2000 ரூபாவும் இல்லை

இக்குடும்பங்களின் அனேகமானவற்றில் உழைப்பாளிகள் கொல்லப்பட்டுள்ளதால் அந்தக் குடும்பங்கள் அனாதைகளாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு இதுவரை அரசாங்கத்தின் எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவில்லை இதற்குமுக்கிய காரணம் இறந்தவர்களின் விபரங்களை முறைப்படி பதிவு செய்து கொள்ளாது போனதேயாகும். இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு வழங்கப்பட்ட 2000ரூபா கூட இவர்களுக்கு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கிளிநொச்சிக் குளம் திருத்தவேலை ஆரம்பம்

(கிளிநொச்சி)

உடைத்து விடப்பட்ட கிளிநொச்சி நகர்க்குளம் மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாவினரே குளத்தை திருத்தி அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இரணைமடுக்குள நீர் இக்குளத்தினூடாகவே 4 ஆம் வாய்க்காலில் இருந்து 10 ஆம் வாய்க்கால் வரை செல்வது வழக்கம். வழக்கத்திற்கு மாறாக குளத்துக்கு அண்மையில் முகாமிட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் இக்குளத்தினூடாக சிறுபோகத்திற்கு நீர் வழங்கத் தடைவிதித்திருந்தனர்.

இதனால் இராணுவத்தினரின் இச்செயலுக்குமாறாக குளக்கட்டின் ஒரு பகுதி உடைக்கப்பட்டு வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (49)

## வீட்டிலிருந்து மண்ணெண்ணை மீட்பு

(செ.த.மை.)

ஆவரங்கால் கிழக்கு- புத்தூர் சந்தியடிப் பகுதியில் திடீர் சோதனையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் ஒரு வீட்டில் இருந்த 30 லீற்றர் மண்ணெண்ணையைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வீட்டில் 1 போத்தல் மண்ணெண்ணை 100ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின்பேரில் சோதனையில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் 30 லீற்றர் மண்ணெண்ணையைக் கைப்பற்றியுள்ளனர்.

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

தண்ணீர் எடுப்பதற்கு சென்ற ஒருவர் கிணற்றில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

கடந்த வியாழன் மாலை சண்டிலிப்பாயைச் சேர்ந்த நடராஜா (வயது26) என்பவர் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார். (உ)

## ஊழியர் இடைநிறுத்தம்

(மாங்குளம்)

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் பணிபுரிந்த சமயாசமய ஊழியர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரத் தடையால் தொழிற்சாலையில் உற்பத்திகள் பாதிப்படைந்ததையடுத்து நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டதால் வருமானத்தை இழந்துள்ளனர். (62)

## யூ.எஸ்.எயிட் திட்டம் விரைவில் நடைமுறையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ''யூ.எஸ் எயிட்'' ஸ்தாபனத்தின் விவசாய அபிவிருத்தி திட்டம் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு உள்ளீடுகள் மற்றும் விவசாய உபகரணங்கள் போன்றவற்றை வழங்குவதுடன் விவசாயம் சம்பந்தமான ஆலோசனைகள் போன்ற பல்வேறு விவசாய அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 1500 விவசாயிகளை இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இம்முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் மேலும் விரிவான முறையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ)

## வலைப்பாடு இறங்குதுறை புனரமைப்பு

(கிளிநொச்சி)

வலைப்பாட்டில் இறங்குதுறை மூன்று அமைப்பதற்கு என ஒதுக்கப்பட்ட 4 லட்சம் ரூபாவில் ஆரம்பிக்கப்பட்ட இறங்குதுறை வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இத்துறைமுக வேலைகளைப் பூநகரி ப.நோ.கூ. சங்கம் செய்து முடித்துள்ளது. கொழும்பிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல் இத்துறைமுகத்தில் வேண்டிய பொருள்களை இறக்கவுள்ளன.

அத்தோடு வலைப்பாட்டில் இருந்து பரந்தன் வரையுள்ள 30 மைல் நீள வீதி திருத்த வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. (49)

## சான்றிதழ்கள் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு வெளிக்கள பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது (உ)

## வங்கியில் பணக்கொடுப்பனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் இன்று முதல் 8 ஆம் திகதி வரை வாடிக்கையாளர்களுக்கு தலா 1000 ரூபா வீதம் பணக்கொடுப்பனவு நிகழவுள்ளது. இரண்டாம் கட்டமாக 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையும் தலா 1000 ரூபா கொடுப்பனவு இடம்பெறவுள்ளது. இக்கொடுப்பனவுகளின் போது நாளொன்றுக்கு 100 வாடிக்கையாளர்களுக்குப் பணம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

